# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# இந்திய செய்தி மடல்

மே 2008 | தனிப்பட்ட உபயோகத்திற்காக | மலர் - 1 இதழ் 3


அன்பு சகோதர சகோதரிகளே,

வணக்கம்.

நாடெங்கிலுமிருந்து வரும் கட்டுரைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து வருகிறது. தங்கள் ஆர்வத்திற்கும் பங்களிப்பிற்கும் நன்றி. தயவுசெய்து தொடர்ந்து செய்திக்கட்டுரைகளை அனுப்பிக்கொண்டிருங்கள். அப்போதுதான் நாட்டின் எல்லா பாகத்திலும் இருக்கும் அப்யாசிகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு பயன்பெற இயலும். ஆசிரியர் குழுவுடன் நடந்த சமீபத்திய சந்திப்பில் நம் மதிப்பிற்குரிய மாஸ்டர் அவர்கள், மடலுக்கான செய்திக்கட்டுரைகள் சரளமாகவும் படிப்பதற்கு சுவாரஸ்யமாகவும் இருக்கவேண்டும் எனவும், கடினமாக இருத்தல் கூடாது எனவும் அறிவுறுத்தினார்கள். செய்திமடலுக்கான குறிப்புகளை அனுப்பும்போது மாஸ்டரின் இந்த அறிவுரையில் கூறப்பட்டுள்ள காரணிகளை மனதில் இருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஜூலை மாத மடலுக்கான செய்திக்குறிப்புகள் வந்துசேரவேண்டிய கடைசிநாள் 15/6/2008 ஆகும். நிகழ்ச்சிகள் பற்றிய செய்திக்குறிப்புகளை நிழற்படங்களுடன், தத்தம் மண்டலப் பொறுப்பாளர் வழியாக.

அனுப்பி வையுங்கள். அன்புடன்,
ஆசிரியர் குழு



## மாஸ்டரின் மார்ச் மாத பயணம்

### திருப்பூர் ஆசிரம திறப்புவிழா



மாஸ்டர் சிறிதுகால ஓய்வுக்காகவும், டயமண்ட் ஜூப்ளி பார்க்கில் அமைந்துள்ள மிகப்பெரிய விசாலமான தியான மண்டபத்தை திறந்து வைப்பதற்காவும் பிப்ரவரி 28ம் தேதி திருப்பூர் சென்றார். 2/3/2008 அன்று திறப்புவிழா கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டது. மாஸ்டர் அப்போது தமிழில் ஆற்றிய உரையில், இடையிடையே மலையாளமும் கலந்திருந்தது அப்யாசிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தியான மண்டபம், பெரிதாகவும், காற்றோட்டமானதாகவும், விசாலமானதாகவும், சுமார் 2500 அப்யாசிகள் அமர்ந்து தியானம் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது. தேவைப்படும்பொழுது விரிவுபடுத்திக்கொள்ளும் வகையில் தியான மண்டபம் எளிய வடிவமைப்பில் கட்டப்பட்டிருக்கிறது.

### கேரளாவிலுள்ள மலம்புழாவில் எஸ்.எம்.எஸ்.எப். புத்துணர்வு மையம்

கேரளாவில் உள்ள மலம்புழாவில் அமைந்திருக்கும் சகஜ மார்க்க ஆன்மீக ஸ்தாபனத்தின் புத்துணர்வு மையத்திற்கு மாஸ்டர் மார்ச் 3ம் தேதியன்று திருப்பூரிலிருந்து காரில் பயணமானார். அம்மையம், பாலக்காட்டை அடுத்து, திருப்பூரிலிருந்து 95 கி.மீ. தொலைவிலும், கோவையிலிருந்து 50 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. அங்கு மாஸ்டர் தியான மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியதோடு, பயணிகள் தங்கும் கட்டடத்தையும் திறந்துவைத்தார். பின்னர் சத்சங்கம் நிகழ்த்திய மாஸ்டர், நம் எல்லோரையும் வேறு உலகத்திற்கே எடுத்துச் சென்றார் எனலாம்.



### கோயம்புத்தூர்

மாஸ்டரின் கோயம்புத்தூர் பயணம் பெரிதும் நினைவுகூறத்தக்கதாக அமைந்தது. சாலை வழியாகக் காரில் சென்றதால் களைப்படைந்து காணப்பட்டாலும் அவர் முகத்தில அப்யாசி சகோதர, சகோதரிகளைச் சந்திக்கும் உற்சாகம் தெரிந்தது.

எந்த் சூழ்நிலையிலும் ஒருவர் சந்தோஷமாக இருக்க முடியும் என்பதை உணர்த்தும் வகையில் மாஸ்டர் அங்கு குழுமியிருந்த பெருந்திரளான அப்யாசிகளை சந்தித்தார். அவர் மேலும், “நான் எந்த அழைப்பிற்காகவும் காத்திருக்காமல் நானாகத்தான் இங்கு வந்தேன். அதற்கு இரண்டு காரணங்கள். அதிலொன்று, இது உங்கள் ஆசிரமம் என்று நீங்கள் நினைப்பதை நான் விரும்பவில்லை, இது என் ஆசிரமம்” என்றார். அப்யாசிகள் மீண்டும் மீண்டும் இரண்டாவது காரணத்தைக் கேட்டபோது அதற்கு மாஸ்டர், “நான் இங்கு வந்ததற்கான இரண்டாவது காரணம், இது மாஸ்டரது ஆசிரமம் மட்டுமல்ல, இது நமது ஆசிரமம் என்பதை உங்களுக்கு அறிவுறுத்துவதேயாகும்” என்றார்.

### பங்களூரு

மார்ச் 6ம் தேதியன்று விமானம் மூலம் மாஸ்டர் பங்களூரை வந்தடைந்தார். மார்ச் 8ம் தேதியன்று, லாலாஜி நிலையம் தியான மையத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார். இந்த தியான மையம் 2008 அக்டோபர் மாதத்தில் நிறைவடைய இருக்கிறது. கட்டுமானப் பணியின் முன்னேற்றத்தையும், அதன் தரத்தையும் கண்டு மாஸ்டர் மகிழ்ச்சியுற்றார்.



ஞாயிறன்று மாஸ்டர் பனசங்கரி ஆசிரமத்திற்கு சென்றார். அங்கு அவரை சந்திப்பதற்காக சுமார் 2000 அப்யாசிகள் கூடியிருந்தனர். ஆசிரமத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தபோது மாஸ்டர் முழு அமைதியுடன் இருந்தார். அங்கு உள்கட்டுமானத்தில் செய்யப்பட்டுள்ள மேம்பாடுகளுக்காக தன் பாராட்டுக்களைத் தெரிவித்தார். எண்ணற்ற அப்யாசிகள் கூட்டமாகக் குழுமியிருந்தபோதும், ஆசிரமத்தின் நடைவழி வழியாக பல அப்யாசிகளைச் சந்தித்த வண்ணம் அவருக்குப் பிடித்தமான இடத்திற்கு நடந்துசென்றார். மாஸ்டருடன் இருக்கக்கூடிய இந்த வாய்ப்பு கிட்டியதற்காக மொத்த ஆசிரமமும் அனைத்து அப்யாசிகளும் நன்றிப்பெருக்குடன் காணப்பட்டனர்.

சத்சங்கத்திற்குப் பிறகு இரண்டு திருமணங்களை நடத்திவைத்து உரையாற்றிய மாஸ்டர், நம் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்பொருட்டு, சகிப்புத்தன்மையையும் கட்டுப்பாட்டையும் வளர்த்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். 9ம் தேதியன்று மாஸ்டர் க்ரெஸ்ட்டில் நடைபெற்ற கர்நாடக பிரெசெப்டார்களின் கருத்தரங்கில் உரை நிகழ்த்தினார். அந்த உரையில், “நாம் எப்பொழுது நமக்கு நாமே நேர்மையானவர்களாக இருக்கப்போகிறோம் நமது நேரத்தை நமது வளர்ச்சிக்காக உபயோகப்படுத்த வேண்டும். நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் பணியாற்ற வேண்டும், அதில் இலக்கினை அடையும் நோக்கு இருக்கவேண்டும், அதுவே நமது பரிசாகும். அப்போது நாம் மாஸ்டருக்காக பணிசெய்கிறோம் என்ற பழைய பொய்யை மறந்துவிடவேண்டும். நான் மீண்டும் சொல்கிறேன், யாரும் மாஸ்டருக்காகவென்று இதுவரை வேலை செய்ததே இல்லை” என்று குறிப்பிட்டார்.

## எஸ்.எம்.எஸ்.எப். புத்துணர்வு மையம், பன்ஷெட்

2008 மார்ச் 14ம் தேதியன்று, மகாராஷ்ட்ரா மாநிலத்தில் புனேக்கு அருகில் இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் இந்தியாவின் இரண்டாவது எஸ்.எம்.எஸ்.எப். புத்துணர்வு மையத்தை தொடங்கிவைத்தார். பன்ஷெட் அணைக்கட்டுக்கு அருகில், கடக்வாஸ்லா ஏரிக்கரையில் இம்மையம் அமைந்துள்ளது. இடத்தைச் சுற்றிலும் மலைத்தொடர்கள் சூழ்ந்துள்ளன. இம்மையத்தில், தியான மண்டபமும், பயணிகள் தங்கும் அறை, சமையலறை மற்றும் சாப்பாட்டு அறைகள் அமைந்துள்ளன.

கேரள மாநில மலம்புழாவில் உள்ள புத்துணர்வு மையத்தைப் போலவே, 2008, ஏப்ரல் மாதம் 14ம் தேதி முதல் புத்துணர்வு நாடி வரும் அப்யாசிகளுக்காக இம்மையமும் இயங்கத் தொடங்கும்.

## பன்வேல் ஆசிரமம், மும்பை

மார்ச் 17ம் தேதி மாஸ்டர் புனேயிலிருந்து காரில் பன்வேலுக்குச் சென்றார். மாஸ்டருக்காகக் காத்திருந்த சுமார் 1400 அன்பு இதயங்கள் மாஸ்டரைக் கண்டதும் மகிழ்ச்சியில் திளைத்தன. மாஸ்டர் ஒவ்வொரு அப்யாசியின் வாழ்த்துக்களையும் ஏற்றுக்கொண்டதன் அடையாளமாக எல்லோருக்கும் தனித்தனியே கையசைத்தது, காண்பதற்கு இனிய காட்சியாக இருந்தது. சின்னக் குழந்தைகளை மாஸ்டர் தனது கையிலிருக்கும் ஊன்றுகோலால் செல்லமாகத் தட்டி ஆசீர்வதித்தார். ஆசிரமத்தை அடைந்ததும் மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். அந்த தியான அமர்வு மிகவும் ஆழமானதாகவும், கலந்துகொண்ட ஒவ்வொரு அப்யாசியும் மாஸ்டரின் சூட்சுமமான அன்புப் பிரவாகத்தை உணரும்படியாகவும் இருந்தது.

மாஸ்டர் ஆசிரமத்தின் ஒவ்வொடு மூலை முடுக்குக்கும் சென்று ஒவ்வொரு அறையாகப் பார்வையிட்டார். மொட்டை மாடிக்குச் சென்ற மாஸ்டர், அங்கிருந்து தெரியும் பசுமை வெளியைக் கண்டுகளித்தார். 18ம் தேதி காலையிலும் மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். பின்னர், இதயவாக்கு 2005 நூலின் மராத்தி மொழிபெயர்ப்பை வெளியிட்டார். பின்னர் பசுமையான வெளியை அடைந்த மாஸ்டர், அங்கு மரக்கன்று ஒன்றை நட்டார். தன் குடிலுக்குத் திரும்பும் வழியில், அங்கிருந்த அமருமிடத்தில் உட்கார்ந்து, இஸ்ரேல் அப்யாசிகளுடன் இயல்பாக பேசிக்கொண்டிருந்தார். அந்த நாடுகளுக்குச் செல்லும்போது மாஸ்டர் சந்தித்த அனுபவங்களையும் கஷ்டங்களையும் பற்றி அவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தார். இரவு 9 மணிவாக்கில் சற்றுநேரம் உணவு கூடத்தின் அருகிலிருந்த அப்யாசிகளுடன் செலவிட்டார்.

மாஸ்டரின் மும்பை வருகை ஹோலி பண்டிகையோடு சேர்ந்து வந்தது, தீமைகளையும் அழுக்குகளையும் புனிதத்தீயில் எரித்துவிட்டு அதில் புனிதமுற்ற மக்கள் அந்த தீயைச் சுற்றிலும் நடனமாடுவதை குறிப்பதாக அமைந்தது. புதிதான வாழ்க்கையைக் குறிக்கும் வகையில் வண்ணமயமாக அமைந்ததே ஹோலிப்பண்டிகை. அதேபோல், இங்கும் வண்ணங்கள் ஏதும் இல்லாவிடினும், ஒவ்வொருவரும் தங்கள் இதயங்களின் உள் ஆழத்தில் அமைதி, அன்பு மற்றும் இன்பம் ஆகியவற்றின் விதவிதமான நிழல்களை மாஸ்டரின் இருப்பால் அனுபவிக்க முடிந்தது.

Master on the banks of the Mandovi, Goa





Retreat Centre, Panshet




Panvel Ashram - Under the mango trees




Panvel Ashram - Meditation Hall

## கோவா

மார்ச் 21ம் தேதி மாஸ்டர விமானம் மூலம் கோவாவுக்கு சென்றார். அங்கு மண்டோவி ஆற்றின் கரையில் இருந்த ஒரு அப்யாசி சகோதரரின் விருந்தினர் அறையில் தங்கினார். 22ம் தேதி காலையிலும் மாலையிலும் ஹூப்ளி, பெல்காம், புனே, மும்பை மற்றும் நாசிக் ஆகிய அருகாமை மையங்களில் இருந்து சுமார் 400 அப்யாசிகள் குழுமியிருந்த ஒரு இடத்திற்குச் சென்றார்.

ஞாயிறு காலை சத்சங்கத்தை நடத்திவிட்டு மாஸ்டர் ஒரு சிறு உரை ஆற்றினார். அப்போது அவர் 500 அப்யாசிகளாவது இருந்தால்தான் அடுத்தமுறை தான் அங்கு வருவேன் என்றார். “சினிமாவுக்கும் தேனிலவுக்கும் இணைந்து செல்லும் தம்பதிகளால், இங்கு மட்டும் கணவனால் மனைவியைக் கொண்டுவர இயலவில்லை, மனைவியால் கணவனைக் கொண்டுவர இயலவில்லையே ஏன்” என்று கேட்ட மாஸ்டர், மேலும், “இங்கு நடப்பது ஆன்மீக தேனிலவு. நாம் என்ன பெற்றோமோ அதை நாம் பகிர்ந்தளிக்க வேண்டும். இல்லையென்றால் நாம் பெற்றது அழுகிப்போய்விடும். கொடுப்பதில் மட்டுமே வாழ்க்கை உள்ளது, கொடுப்பதற்காக மட்டுமே கடவுள் நமக்குக் கொடுக்கிறார். அதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்” என்றார்.

23ம் தேதி மாலை தன் குடிலைவிட்டு வெளிவந்த மாஸ்டர் ஆற்றின் கரையில் அமர்ந்தார். சுமார் 40 அப்யாசிகள் மாஸ்டரின் தெய்வீகக் காலடியில் அமைதியாக அமர்ந்திருந்தனர். அப்போது சத்சங்கம் நடத்திய மாஸ்டர், பின்னர், மழை வர ஆரம்பித்தவுடன் குடிலுக்குள் சென்றார். 24ம் தேதி காலை ஞாயிறு சத்சங்கம் நடக்கும் இடத்திற்குச் சென்ற மாஸ்டர், மும்பை வழியாக சென்னை செல்வதற்காக விமான நிலையத்திற்குப் புறப்பட்டார்.

### 24 ஜூலை லக்னோவில் மாஸ்டரின் 81வது பிறந்த ஆண்டு நிறைவு விழா

மாஸ்டரின் 81வது பிறந்த ஆண்டு நிறைவு விழா உத்தரப்பிரதேசத்தில் உள்ள லக்னோவில் 2008 ஜூலை 23, 24, 25 தேதிகளில் கொண்டாடப்படுகிறது.

அதற்கான சுற்றறிக்கைகள், படிவங்கள், செய்திகள் கீழ்க்கண்ட இணையதளத்தில் கிடைக்கும்.
http://www.srcm.org/members/24july2008/index.jsp

அப்யாசிகள் தங்களால் இயன்ற அளவு விரைவாக 2008 மே 15ம் தேதிக்குள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


முன்கூட்டிய தயாரிப்புகளுக்காக தன்னார்வத் தொண்டர்கள், விழா தொடங்குவதற்கு இரண்டு வாரங்கள் முன்னதாகவே அங்கு இருக்கவேண்டியிருக்கிறது. சில தன்னார்வத் தொண்டர்கள் விழா முடிந்தபின், பத்து நாட்களுக்கு அங்கு தங்கி, விழாவின் நிறைவுப்பணிகளை செய்யவேண்டியிருக்கும்.

### எஸ்.எம்.எஸ்.எப். புத்துணர்வு மையங்கள்

மலம்புழாவிலும், பன்ஷெட்டிலும் உள்ள எஸ்.எம்.எஸ்.எப். புத்துணர்வு மையங்கள் அப்யாசிகளுக்காக 14 ஏப்ரல் 2008லிருந்து ஆரம்பமாகும். அங்கு சென்று 3லிருந்து 30 நாட்கள் வரை புத்துணர்வு பெற விரும்பும் அப்யாசிகள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளத்தில் பார்க்கவும்.
http://sahajmarg.org/welcome/retreat/ind/ex.html

### புதிய எம்பி3 சிடி

அவர், ஹுக்கா மற்றும் நான் - இருளில் ஒளி என்ற தலைப்பில் எம்பி3 சிடி, ஜூலை2007ல் வெளியிடப்பட்ட 18 டிவிடிக்களின், ஒலி வடிவங்களின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. இவை சிறப்பு வெளியீட்டுக்காக மாஸ்டர் அருளிய முக்கியமான பேருரைகளின் மொத்த தொகுப்பாகும்.




## ஆசிரம பராமரிப்பு அடிப்படைப் பயிற்சி

ஆசிரம பராமரிப்பு அடிப்படைப் பயிற்சி 2008 ஜூன் 1ம் தேதி முதல் 30ம் தேதிவரை சென்னை பாபூஜி நினைவு ஆசிரமத்தில் நடைபெறும். ஆங்கிலத்தில் நடத்தப்படும் இந்த பயிற்சி, ஒரு ஆசிரமத்தைப் பராமரிப்பதில் உள்ள எல்லாவித அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

கீழ்க்கண்ட தகுதியுள்ளோர் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

1. இந்தியாவெங்கிலுமிருந்து 19 முதல் 50 வயது வரை உள்ள அப்யாசிகள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.
2. குறைந்தபட்சம் ஒரு வருடம் சகஜ மார்க்க பயிற்சி செய்திருக்கவேண்டும்.
3. குறைந்தபட்சம் ஒரு பண்டாரா விழாவில் கலந்துகொண்டிருக்கவேண்டும்.
4. மண்டலப்பொறுப்பாளர், மையப்பொறுப்பாளர், பிரசெப்டர், அந்தந்த நாட்டின் பொறுப்பாளர் ஆகியோரில் யாரிடமிருந்தாவது பெறப்பட்ட நன்னடத்தை சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.
5. பயிற்சிக் காலத்தில் நிதி மற்றும் வேறுவித ஆதாயத்தையும் (ஆசிரமத்தில் இலவசமாக வழங்கப்படும் உணவு, இருப்பிட வசதியைத் தவிர) எதிர்பார்க்கக் கூடாது. போதுமான அளவு மாற்று உடைகளையும், தனிப்பட்ட செலவிற்கான பணமும் அவரவரே கொண்டுவரவேண்டும்.
6. பங்கேற்போர் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு மிக்கவராகவும், பயிற்சிக்காலம் முழுவதும் தங்கியிருந்து பயிற்சி பெற ஆர்வம் உள்ளவராகவும் இருக்கவேண்டும்.
7. இந்தப் பயிற்சிக்கு வெளிநாட்டு அப்யாசிகள் 3 பேரும் தேர்வு செய்யப்படுவார்கள்.

இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக முடிப்போர், மணப்பாக்கத்திலோ அல்லது இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள ஆசிரமங்களிலோ ஆசிரமப் பணியாளர்களாக எடுத்துக்கொள்ளப்படுவதற்கான தகுதியைப் பெறுவர்.

அப்யாசிகள் தங்கள் விண்ணப்பங்களை அவரவர் மண்டலப்பொறுப்பாளர், மையப்பொறுப்பாளர், பிரசெப்டர், அந்தந்த நாட்டின் பொறுப்பாளர் இவர்களில் யாராவது ஒருவர் வழியாக 2008 மே மாதம் 10ம் தேதிக்குள் அனுப்பவேண்டும். பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் அப்யாசிகளுக்கு 2008, மே மாதம் 12ம் தேதி அவர்கள் தேர்வுபெற்ற விபரம் தெரிவிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப்படுவோர், 2008, மே மாதம் 28ம் தேதியன்று மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு வந்துவிட வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

எஸ்.பிரகாஷ், ஆசிரம பராமரிப்பு மேலாளர்,
பாபூஜி மெமோரியல் ஆசிரமம், ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன், உலகத் தலைமையகம், மணப்பாக்கம், சென்னை 600 116, இந்தியா. தொலைபேசி 91 44 4217 1111
மின்னஞ்சல் prakash@seechangeworld.com
விண்ணப்பப் படிவத்தைப் பெற, கீழ்க்கண்ட இணையதளப் பக்கத்தைக் காணவும்.
http://www.srcm.org/members/forms/amop-appform.pdf

## இளைஞர்களுக்கான க்ரெஸ்ட்/சாதனா பயிற்சி முகாம்

20 முதல் 30 வயதுக்குள் உள்ள அப்யாசிகளுக்காக ஒரு பயிற்சி முகாமை வடிவமைத்துள்ளதை அறிவிப்பதில் க்ரெஸ்ட் மகிழ்வுறுகிறது. இந்த இளைஞர்களுக்கான சாதனா பயிற்சி முகாம், க்ரெஸ்ட்டில் 6 நாட்களுக்கு தங்கியிருந்து பெறும் பயிற்சியாகும். இப்பயிற்சிக்கான திட்ட வழிமுறை, பொதுவான சாதனா பயிற்சி முகாமுக்கு உள்ளதைப்போன்றே இருக்கும் எனினும், குறிப்பாக, உரையாடல்கள் இளைஞர்களை மையமாகக் கொண்ட தலைப்புகளில் இருக்கும்.

இதில் தன்னார்வத் தொண்டுக்கான ஆர்வம், சகஜ மார்க்க பத்ததியில் திருமணம், வீட்டிலும், பணியிடங்களிலும் நமது உறவுமுறை, நிதியாதார திட்டமிடுதல், குடும்பத்துக்கான திட்டமிடுதல், குடும்பத்தின் முக்கியத்துவம் ஆகிய விஷயங்கள் இடம்பெறும்.

பொதுவான சாதனா பயிற்சி முகாமில் நிகழும் உரையாடல்களான தியானம், சுத்திகரிப்பு மற்றும் நிலையான நினைவு ஆகியவை இதிலும் இடம்பெறும்.

ஆங்கிலத்தில் நடைபெறும் இப்பயிற்சி முகாமின் முதல் முகாம், 2008 ஜூன் மாதம் 17ம் தேதிமுதல், 22ம் தேதிவரை நடத்தப்படும். 20 முதல் 30 வயது வரையுள்ள எல்லா அப்யாசிகளும் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள் ஆவர்.

விண்ணப்பங்களை கீழ்க்கண்ட வலைத்தளப் பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
http://www/sahajmarg.org/welcome/crest/index.html

விண்ணப்பங்களை பூர்த்திசெய்து crest.applications@sahajmarg.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 'sadhana program-Youth' என்று குறிப்பிட்டு எழுதி அனுப்பவும்.

## நன்னெறி கல்வி பயிற்சிகள்

### ராஜஸ்தான்

நன்னெறி அடிப்படையிலான ஆன்மீக கல்வித்திட்டம் ராஜஸ்தான் மாநிலத்தில் மிக நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. ராஜஸ்தான் மண்டலத்துக்கான விபிஎஸ்சி/யின் பொறுப்பாளர் சகோதரி ராணி மிஸ்ரா, அப்யாசிகளுக்கு இக்கல்வி திட்டம் பற்றிய பயிற்சிமுகாம் ஒன்றை 2008 ஜனவரி 13ம் தேதியன்று கோட்டாவிலும், மார்ச் 20ம் தேதி ஜெய்பூர், காடிபூராவில் உள்ள ஸ்காலர்ஸ் அகாடெமி உயர்நிலைப் பள்ளியிலும் நடத்தினார். அப்பள்ளியின் இயக்குநரும், முதல்வரும் இந்தப் பயிற்சிமுகாமில் கலந்துகொண்டனர். இந்த பயிற்சி வகுப்பு இதில் கலந்துகொண்ட அனைவராலும் பாராட்டப்பட்டது.

### மதனப்பள்ளி

விஸ்வம் பி.எட். கல்லூரியில் ஒரு நன்னெறி கல்வி பயிற்சி வகுப்பு 2008 மார்ச் 1ம் தேதி நடத்தப்பட்டது. சுமார் 110 மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

சகோ.வெங்கட் ரெட்டி நன்னெறிகளின் தேவை பற்றியும், சகோ.பிரம்மானந்தம் நன்னெறிகளை கல்வித்திட்டத்தில் நடைமுறைப்படுத்துதல் பற்றியும் பேசினார்கள். கலந்துகொண்ட மாணவர்களின் கேள்விகளுக்கு சகோ.பிரம்மானந்தம் பதிலுரைகள் வழங்கினார்.

### அனந்தபூர்

மார்ச் மாதம், சகோதரி காயத்ரி தலைமையிலான விபிஎஸ்சி குழு, அனந்தபூரில் உள்ள பள்ளிகளுக்குச் சென்றது. நன்னெறி அடிப்படையிலான கல்விமுறையை பள்ளிகளில் நடைமுறைப்படுத்துதலின் அவசியத்தைப் பற்றி அவர்கள் ஒவ்வொரு பள்ளியிலும் விளக்கினார்கள். பள்ளி நிர்வாகத்தினர் தமது பள்ளிகளில் நன்னெறி கல்வி பாடத்திட்டத்தை செயல்படுத்திட பெரிதும் ஆர்வம் காட்டினார்கள்.

## மன அழுத்தத்தை நிர்வகித்தல் பற்றிய சொற்பொழிவு

### இஃப்கோ, (IFFCO) கலோல், குஜராத்

மன அழுத்தத்தை நிர்வகித்தல் பற்றிய சொற்பொழிவு ஒன்று, சகோ.சி.ராஜகோபாலன் அவர்களால் மார்ச் 19ம் தேதியன்று, கலோலில் உள்ள இஃப்கோ எனப்படும் இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு தொழில்நிபுணர் அமைப்பின் பயிற்சி மைய அரங்கத்தில் நிகழ்த்தப்பட்டது. தொழிற்சாலை வளாகத்திலேயே நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், 100க்கும் அதிகமான தொழிலாளர்களோடு, கலோல்-இஃப்கோ தொழிற்சாலையின் இணை பொது மேலாளர்களும், துணை பொது மேலாளர்களும் கலந்துகொண்டனர். பணியாளர்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்ற இச்சொற்பொழிவின் முடிவில், பல பணியாளர்கள் சகஜ மார்க்க தியான முறையை ஆரம்பிப்பதற்கு ஆர்வமாக இருந்தனர்.



## தியானம் மூலம் மன அழுத்தத்தில் இருந்து விடுபடல்

### போலீஸ் அகாடெமி, மைசூர்

பங்களூர் சகோ.பாஸ்கர் ராவ், தியானம் மூலம் மன அழுத்தத்தில் இருந்து விடுபடல் என்ற தலைப்பில் மைசூரில் உள்ள கர்நாடக போலீஸ் அகாடெமியில் உரை நிகழ்த்தினார்.

இவ்வுரை, அகாடெமியில் நடைபெற்ற புத்தாக்க வகுப்பில் கலந்துகொண்ட காவல்துறை அதிகாரிகளுக்காக நிகழ்த்தப்பட்டது. நன்கு தயாரிக்கப்பட்ட, ஆர்வமூட்டக்கூடிய, தற்காலத்துக்கு மிகவும் தேவைப்படுவதாக இருந்த அவர்தம் சொற்பொழிவில், அழுத்தம் மிக்க வெளிப்புற வாழ்க்கையையும், பணிரீதியிலான அழுத்தத்தையும், அதனால் மனிதர்கள் சந்திக்க நேரும் பல்வேறு எதிர்மறை விளைவுகளையும், தியானத்தின் மூலம் எதிர்கொண்டு எவ்விதம் உள் அமைதியையும், நல்வாழ்வையும் பெறலாம் என்பது பற்றி விளக்கிப்பேசினார். அவ்வுரையில் சகோ.பாஸ்கர் ராவ், மன அழுத்தம், மனம், லட்சியம், அதி உன்னத லட்சியம் என்பன பற்றி குறிப்பாக விளக்கிப்பேசினார். மொத்தத்தில், சொற்பொழிவு முழுவதும், மூத்த காவல்துறை அதிகாரிகளின் ஈடுபாட்டுடன் கூடிய பங்கேற்போடும், பரஸ்பர உரையாடல்களோடும் இருந்தது. கேள்வி-பதில் நிகழ்ச்சியுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.



## இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்

### ஜெய்பூர்

ஜெய்பூர், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் அதன் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக தியானம் பற்றியும், மன அழுத்தத்தை நிர்வகித்தல் பற்றியும் ஒரு விளக்கவுரை அளிக்கும்படி நமது மிஷனுக்கு அழைப்பு விடுத்திருந்தது. அவர்களுக்கான இரண்டுநாள் நிகழ்ச்சியில், முதல்நாள் ஆரம்பத்திலேயே நமது விளக்கவுரைக்கு 90 நிமிடங்கள் ஒதுக்கியிருந்தனர். இவ்விளக்கவுரை, தியானம் என்றால் என்ன, தியானத்தின் நற்பயன்கள், சகஜ மார்க்கம் எதை அளிக்கிறது, சகஜ மார்க்க தியானத்தை எவ்விதம் ஆரம்பிப்பது என்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சகோ.சஞ்சீவ் சிங் நடத்திய இந்நிகழ்ச்சியில் ஜெய்பூர் பிரிவு எல்.ஐ.சி. பணியாளர்கள் அனைவரும் பல சிறுகுழுக்களாகப் பிரிந்து இதில் கலந்துகொண்டனர். கடந்த மூன்று மாதங்களாக இவ்விதம் 14 நிகழ்வுகள் நடந்துள்ளன.

எல்லா நிகழ்வுகளிலும் கலந்துகொண்டோர் இதில் மிகவும் ஆர்வம் காட்டியதோடு சகஜ மார்க்க தியானத்தை ஆரம்பிக்கவும் தயாராக உள்ளனர்.



## டாமனில் உள்ள வல்சாடில் ஆசிரம நிலம்

### 2008 பிப்ரவரி 25

சகோ. பாஜ்பாய் (செயலாளர், எஸ்ஆர்சிஎம்) ஆசிரம இடத்தைப் பார்வையிட்டதோடு எதிர்காலக் கட்டுமானப் பணிகளுக்கான திட்டங்களையும் சுருக்கமாக விளக்கினார். வல்சாட், வாபி, கேர்காம், நவ்சாரி, மற்றும் பர்தோலி மையங்களில் இருந்து சுமார் 100 அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்துகொண்டனர். மதிப்பிற்குரிய மாஸ்டரின் சூட்சுமமான இருப்பை உணர்த்தும் வகையில் அங்கு எல்லோரும் உணரக்கூடியதான ஓர் அமைதிநிலை நிலவி, புத்துணர்வையும் புதுமையான ஆர்வத்தையும் ஊட்டியது.

உவகையும் சந்தோஷமும் மேலிட்ட ஒரு சூழலில், சகோ.சுரேஷ், திரு.பாஜ்பாய் மற்றும் டாக்டர் சுரேந்திர அகர்வால் (துணை/மண்டல ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் அப்யாசிகளுடன் உரையாடினார்கள். சகோ.ஹிதேஷ் (மையப்பொறுப்பாளர்) நிறைவுரை ஆற்றினார். வல்சாட் ஆசிரம நிலத்தை பதிவுசெய்த பின்னர் இது நடைபெற்றது.

### 2008 ஏப்ரல் 6

வல்சாட் ஆசிரம நிலத்தில் ஏப்ரல் 6ம் தேதி ஞாயிறன்று நடைபெற்ற ஓபன் ஹவுஸ் நிகழ்ச்சிக்காக கிராமத்தலைவர் தாலட்டி மற்றும் உள்ளூர் எம் எல் ஏ உள்ளிட்ட சுமார் 100 கிராம மக்களுக்கும் பிரமுகர்களுக்கும் அழைப்பு விடப்பட்டது. அன்று நடைபெற்ற கூட்டு சத்சங்கத்தில் வல்சாட், வாபி, கேர்காம் மற்றும் உமரகாம் ஆகிய ஊர்களிலிருந்து 150 அப்யாசிகள் கலந்துகொண்டனர்.

தெய்வீகமான மற்றும் ஆன்மீகப் பணிக்காக ஒன்றரை ஏக்கர் நிலத்தை ஆசிரமம் அமைப்பதற்காக விற்ற நில சொந்தக்காரர்களுக்கு சால்வை போர்த்தப்பட்டது. நாங்கள் எந்தவித மதமாற்றத்தையும் செய்வதற்காக வரவில்லை என்றும், எந்த மதத்தையோ, ஜாதியையோ அல்லது பிரிவையோ நாங்கள் சார்ந்தவர்கள் அல்ல என்பதையும் நாங்கள் அவர்களுக்குத் தெரிவித்தோம். நல்ல மனித இனத்தை உருவாக்கவும், மனிதர்களின் குணாதிசயங்களை மேம்படுத்தவும் சகஜ மார்க்கப் பயிற்சி உதவுகிறது என்பதை அறிந்துகொண்ட கிராம மக்கள் மிகவும் மகிழ்வுற்றனர்.

மதங்கள் வழியான வாழ்க்கைக்கும், ஆன்மீகத்துக்கும் உள்ள வேற்றுமைகள் அங்கிருந்த மக்களுக்கு விவரிக்கப்பட்டன. அதன்பின், அங்கு குழுமியிருந்த சுமார் 300 பேர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. நிறைய கிராம மக்கள் சகஜ மார்க்க தியானப் பயிற்சியைப் பெற்று அப்பியாசம் செய்ய மிகுந்த ஆர்வம் காட்டினர். இந்த ஆர்வம், அவர்களின் வளமைக்கும், வல்சாட் ஆசிரம சொத்தை பராமரிப்பதற்கும், நல்ல முறையில் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஏதுவாக அமையும்.

சுரேஷ் ராஜகோபாலன், அஹமதாபாத்



## குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு

### இந்தூர் மையம்

மதிப்பிற்குரிய மாஸ்டர் வழிகாட்டியுள்ளது போல குழந்தைகளை வளர்ப்பதில் அப்யாசி பெற்றோர்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் அரைநாள் பயிற்சி முகாம் பிப்ரவரி 24ம் தேதி இந்தூரில் நடைபெற்றது. குறிப்பாக, மதிப்பிற்குரிய லாலாஜி, மதிப்பிற்குரிய பாபூஜி மற்றும் நமது மாஸ்டர் ஆகியோரின் எழுத்துக்களில் இருந்தும் சொற்பொழிவுகளில் இருந்தும் பெற்றோரின் பங்கை வலியுறுத்தக்கூடிய பகுதிகள் படிக்கப்பட்டன.

சகோதரி யாமினி கர்மர்கர், சகோ. ராஜேஷ் ராவெர்கர் ஆகியோர் இந்த நிகழ்வுக்கு ஒருங்கிணைப்பாளர்களாக இருந்தனர். இந்தப் பயிற்சி மூன்று பகுதிகளாக நடத்தப்பட்டது. முதல் பகுதியில், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்குமான பல்வேறு பிரச்சினைகள் குறித்து குழு விவாதங்கள் நடத்தப்பட்டன. இரண்டாவது பகுதியில், பங்கேற்பாளர்களுக்கும், ஒருங்கிணைப்பாளர்களுக்குமிடையே கலந்துரையாடல் நடந்தது. மூன்றாவது பகுதியில், மத்திய் பிரதேச மாநிலத்தின் மண்டலப் பொறுப்பாளரான சகோ.விகல்ப் முந்த்ரா அவர்களும், சகோ.நிர்மல் தக்தி அவர்களும் நிகழ்ச்சியின் நிறைவுப் பகுதியை நடத்தி வைத்தனர். மாஸ்டர் இது கூரிஷ்யமாக நமக்குக் கற்பித்துள்ளவற்றை நடைமுறைப்படுத்தல், உண்மையாகவும், நேர்மையாகவும் பயிற்சி செய்தல், நமது நடத்தையில் மாற்றத்தைக் கொண்டுவருதல் ஆகியன நமது குழந்தைகளிடம் நேர்மறையான விளைவுகளைக் கொண்டுவரும் என்பதே இந்த விவாதங்களின் இறுதி விளைவாக அமைந்தது.

ராஜேஷ் ராவெர்கர், யாமினி கர்மர்கர்



குழந்தைகள் குடும்பத்தில் ஒத்திசைவையும், அமைதியையும், ஆசீர்வாதத்தையும் கொண்டுவரும் ஊக்கிகளாக உள்ளனர். நமது வாழ்வில் மகிழ்ச்சிப் பெருக்கின் இரண்டு முக்கியமான உள்ளீடுகளான அறிவொளியையும் சிரிப்பையும் அவர்கள் கொண்டுவருகின்றனர். அவர்கள் எங்கு பிறந்தார்களோ அந்தக் குடும்பத்தின் எதிர்காலத்துக்கு மட்டுமல்லாது, மனித இனம் முழுவதற்கும் பிரதிநிதிகளாக இருந்து, மனித குலத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்குமான பங்களிப்பை அவர்கள் செய்வதால், அவர்களை உருவாக்குவதன் மூலம் மனித இனத்தின் எதிர்காலத்தை குறிப்பிட்ட விதத்தில் வார்த்தெடுப்பதில் நாமும் பங்குகொண்டவர்களாக ஆகிறோம்.

பா.ராஜகோபாலாச்சாரி
கிருஷ்ணா "நினைவு அலைகளின் வழியே" பாகம் 2



## இந்தூர் மையத்தில் புதிய அப்யாசிகளுக்கான பயிற்சி

*ஒரு மேய்ப்பனுக்கு வீட்டிலிருக்கும் நூறு ஆடுகளைப் பற்றிய கவனம் இருப்பதில்லை, அந்தக்கணத்தில் தொலைந்துபோன ஒரு ஆட்டைப்பற்றித்தான் அவனுக்குக் கவலை. ஆகவே அன்பு எப்போதும் தொலைந்துபோன அந்த ஒன்றைப் பற்றியே கவலைகொள்கிறது.*

சகஜ மார்க்க கோட்பாடுகள் பாகம் 10 பக்கம் 130 - மதிப்பிற்குரிய சாரிஜி



இந்தூர் மையத்தில் பலர் அப்யாசிகளாகச் சேர்ந்த போதிலும், சற்று காலத்திற்குப் பிறகு அவர்களில் பலர் விலகிவிட்டது தெரியவந்தது. அதற்கு வேறுபட்ட காரணங்கள் இருந்தன. எனவே அந்த மையத்தில் விலகிச் செல்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டியதன் அவசியம் உணரப்பட்டு, அதற்குத் தீர்வுகாணும் விதத்தில் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

2008 மார்ச் 23ம் தேதி, ஜனவரி 2007க்குப் பிறகு மிஷனில் சேர்ந்த நமது புதிய சகோதர சகோதரிகளுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. சுமார் 50 அப்யாசிகள் இதில் கலந்துகொண்டனர்.

பயிற்சிக்கான சூழல் நட்புறவு மிக்கதாகவும் இனிமை மிக்கதாகவும் இருந்தது. இந்தூர் மையப்பொறுப்பாளர் சகோ.அவினாஷ் கர்மர்க்கரும், சகோ.நிர்மல் தக்தியும், பயிற்சிமுறை பற்றி முழுமையான அறிமுகத்தை வழங்கினர். சகஜ மார்க்கப் பயிற்சியின் பல்வேறு கூறுகளைப் பற்றி விரிவாக விளக்கியதுடன், அதன் எளிமையைப் பற்றியும், அப்பயிற்சியை தவறாது இடைவிடாமல் செய்வதன் அவசியத்தைப் பற்றியும் ஆழமாக விளக்கினார்கள். இந்தக் கருத்துக்களை விளக்கிச் சொல்லக்கூடிய ஒரு கணினி விளக்கம் இந்தநிகழ்வை ஆர்வமூட்டக்கூடியதாகவும் உயிரோட்டம் மிக்கதாகவும் ஆக்கியது. கேள்வி-பதில் நிகழ்ச்சியும், நிறைவுரையும் டாக்டர் பி.சி.சர்மா அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

ராஜேஷ் ராவெர்கர், யாமினி கர்மர்கர்

Youth Workshop, Coimbatore



## அப்யாசிகளுக்கான பயிற்சி திட்டம்

### ஜோர்ஹாட் மையம்

எப்ரல் 6ம் தேதியன்று ஜோரஹாட் மையத்தில் ஒரு நாள் அப்யாசிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது.ஜோர்ஹாட், நஸிரா, சிப்ஸங்கர் மற்றும் திபு மையங்களிலிருந்து 48 அப்யாசிகள் அதில் கலந்துகொண்டனர். அப்யாசிகள் மட்டுமல்லாது, ஜோர்ஹாட் பொறியியல் கல்லூரியில் படிக்கும் 4 பொறியியல் மாணவர்களும், அவர்களது நண்பர்கள், உறவினர்கள் சிலரும் இதில் கலந்துகொண்டனர். இப்பயிற்சி, ஒரு சத்சங்கத்துடன் தொடங்கியது.

கவுஹாத்தி மையத்தின் சகோ.அசோக் சென்குப்தா இப்பயிற்சியை நடத்தினார். ஒரு கணினி விளக்கப்படக் காட்சியுடன், அவர் மாஸ்டர், மிஷன், பயிற்சிமுறை ஆகியவை பற்றி விளக்கினார். சாதனாவுக்கான ஆரோக்கியமான அணுகுமுறையை முக்கியமான ஆறு அம்சங்களைக் கைக்கொள்வதன் மூலம் எப்படி சாதிக்கலாம் என்பதே பயிற்சியின் முக்கியக் கருத்தாக இருந்தது. அந்த முக்கிய அம்சங்களாவன- காலை தியானம், மாலை சுத்திகரிப்பு, இரவு பிரார்த்தனை தியானம், சத்சங்கம், தனீ தியானங்கள் மற்றும் மாஸ்டர் மீதான அன்பும் அர்ப்பணிப்பும். இவற்றில் எது ஒன்றை விட்டுவிட்டாலும், முறையான முன்னேற்றத்தை சாதிக்க இயலாது.

இந்த விளக்கப் பயிற்சியின் முடிவில் சுமார் ஒரு மணி நேரம் கேள்வி-பதில் நிகழ்ச்சி நடந்தது. மாலை 4.30 மணிக்கு கூட்டு தியானத்துடன் பயிற்சி நிறைவுற்றது.



## இளைஞர் பயிற்சி முகாம்

### கோயம்புத்தூர் 2008 ஜனவரி 25, 26, 27

“எதிர்காலம் நமக்குள்ளே” என்பதுதான் கோயம்புத்தூர் ஆசிரமத்தில் நடைபெற்ற இரண்டு நாள் இளைஞர் பயிற்சி முகாமின் முக்கியக் கருத்தாக இருந்தது. கோயம்புத்தூர், ஊட்டி, பொள்ளாச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களிலிருந்து 35 அப்யாசிகள் இதில் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சிக்கு மாஸ்டரே பொறுப்பு வகித்ததுபோல் உணரமுடிந்தது. ஏனெனில், அந்தச் சூழலில், சூட்சுமமான அமைதியும், உவகையும் குடிகொண்டிருந்தன.

தர்ஷன், தர்ஷனா-பார்க்கும் வழிமுறை, மாற்றம் ஆகிய முக்கியத் தலைப்புகள், குழு-விவாதங்கள், வினாடி-வினா நிகழ்ச்சி, கேள்வி-விளக்கவுரைகள், “அவர், ஹுக்கா மற்றும் நான” வீடியோ திரையீடு போன்ற பல்வேறு வழிமுறைகள் இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

எதிர்காலத்தை தெய்வீகத் திட்டத்துக்கு ஏற்றார்போல் ஆக்கிக்கொள்ள நிகழ்காலத்தில் நாம் ஏதாவது செய்தாகவேண்டும், அதையும் இங்கு-இப்பொழுது செய்தாகவேண்டும் என்ற செய்தி, இப்பயிற்சியின் மூலம் அழுத்தமாகச் சொல்லப்பட்டதால், பங்கேற்பாளர்கள் அனைவரும் இதில் லயித்து ஆழ்ந்துபோயினர். ஆக, இப்பயிற்சியின் நோக்கம் மிகச்சரியாக அடையப்பெற்றது.

சகோ. ஜி.கிருஷ்ணமூர்த்தி, கோயம்புத்தூர்

## மண்டல கூட்டங்கள்

### மதுகிரி மையம்

பங்களூரில் இருந்து சுமார் 105 கி.மீ. தொலைவில் உள்ள மதுகிரி, தும்கூர் மாவட்டத்தில் உள்ள ஒரு தாலுகா ஆகும்.
இம்மையம், 20 அப்யாசிகளுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக இயங்கி வருகிறது. வார இறுதியில், வாரம்விட்டு வாரம், பிரசெப்டர்கள் இம்மையதத்திற்கு சென்று வருகிறார்கள்.

மார்ச் 23ம் தேதியன்று மதுகிரி மையத்தில், அருகிலுள்ள மையங்களுக்கும் சேர்த்து முழுநாள் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஒருவரின் ஆன்மீகப் பரிணாம வளர்ச்சியில், மாஸ்டரின் பங்கைப் புரிந்துகொள்ளவும், அதன் அருமையை உணரவும், பண்டாராக்களில் கலந்துகொள்வதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளவும் அருகாமை மையங்களில் உள்ள அப்யாசிகளுடன் உரையாடுவதும், அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதுமே இந்த முழுநாள் கூட்டத்தின் நோக்கமாக இருந்தது.

தும்கூர், திப்தூர், கௌரிபிதனூர், மதுகிரி மற்றும் பங்களூர் மையங்களில் இருந்து சுமார் 60 அப்யாசிகள் இந்த முழுநாள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அப்யாசிகளின் வாழ்க்கையில் நிகழும் மனப்போராட்டங்களைக் களைவதற்கு, இது போன்ற கூட்டங்களில் பங்கேற்பது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதும் இங்கு குறிப்பாகச் சொல்லப்பட்டது. அப்யாசிகள், அவரவர் மையங்களின் அனுமதியோடு மாஸ்டரைச் சென்று சந்திப்பது மாஸ்டருடன் ஒரு உள்நிலைத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள உதவும் என்பது அப்யாசிகளுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டு அவர்கள் மாஸ்டருடனான சந்திப்புக்கு ஊக்குவிக்கப்பட்டார்கள்.

அப்யாசிகள் ஒருவருக்கொருவர் சகஜ மார்க்கத்தில் தமக்கு ஏற்பட்டுவரும் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். ஒரு குழு-கலந்துரையாடலும் நடைபெற்றது. அப்யாசிகளின் இதயங்களைத் திறக்க உதவியதாலும், அப்யாசிகளிடையே ஒருவித ஒருமையுணர்வையும் சகோதரத்துவத்தையும் மேம்படுத்தியதாலும், இந்தக் கூட்டம் வெற்றிகரமானதாக ஆயிற்று.

இத்துடன் சேர்த்து, மதுகிரி மையத்துக்குட்பட்டவர்கள் 25 பேர் கலந்துகொண்ட ஒரு ஓபன் ஹவுஸ் நிகழ்ச்சி இங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் கலந்துகொண்ட பலர், அம்மையத்தைச் சேர்ந்த அப்யாசிகளின் கணவன்-மனைவியாகவோ, பிற குடும்ப உறுப்பினர்களாகவோ இருந்தனர். டாக்டர்.கிருஷ்ணமூர்த்தியும், சகோ.அமர்நாத்தும் இந்த ஓபன் ஹவுஸை நடத்தியதோடு, கலந்துகொண்டோரின் கேள்விகளுக்கும் பதிலுரை வழங்கினார்கள்.





## ஆசிரியர் பயிற்சி வகுப்பு



ஸ்மிருதியின் இந்த பயிற்சி வகுப்பின் நோக்கம், பொது மேடைகளில் சகஜ மார்க்கம் பற்றி பேசுவதற்கு அப்யாசிகளை தயார் செய்வதேயாகும். இதன் தொடக்க வகுப்பில் 20 அப்யாசிகளும் பிரசெப்டர்களும் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்டனர். பங்கேற்பாளர்கள் மொழிரீதியாக (ஆங்கிலம் மற்றும் தமிழ்) குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு வார இறுதிநாட்களில் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு குழுவையும் இரு வாரங்களுக்கு ஒருமுறை கூட்டி, அதில் ஒவ்வொரு உறுப்பினரும் பத்து நிமிடங்களுக்கு இரண்டு தலைப்புகளில் பேசும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. பயிற்சியாளர்கள் தமக்கான தலைப்புகளில் பேசத் தயாராக வருவதற்காக, தலைப்புகள் முன்னரே கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு சொற்பொழிவின் இறுதியிலும், திட்ட ஒருங்கிணைப்பாளரால் வழங்கப்பட்ட பதிலுரை, தாங்கள் மேம்பட்டுள்ள பகுதிகளை அடையாளம் காண அவர்களுக்கு உதவியது. பார்வையாளர்களைப் புரிந்துகொண்டு பேசுதல், தலைப்புக்கான முக்கியக் கருத்தை உருவாக்குதல், சொல்லவரும் கருத்துகளுக்குத் தேவைப்படும் ஆழம், சரியான விளக்கங்கள், கருத்து ரீதியிலான தெளிவு, வடமொழி சொற்களைப் பயன்படுத்துதல், இதயத்தின் ஆழத்திலிருந்து பேசுதல், பேச்சின் வேகம், உச்சரிப்பு, லாவகம், பேச்சுக்கான காலத்தை கட்டுப்படுத்துதல் ஆகிய விஷயங்கள் பயிற்சியாளர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

பயிற்சி வகுப்பு, அடிப்படையான தலைப்புகளான தியானம், சுத்திகரிப்பு மற்றும் பிரார்த்தனை ஆகியவற்றுடன் ஆரம்பித்து, அதன்பிறகு ஆழமான தலைப்புகளான அன்பு, பற்றுறுதி மற்றும் சரணடைதல் ஆகியவற்றை நோக்கி முன்னேறியது. சகஜ மார்க்கம் எளிமையானது, ஆனால் எளிதானது அல்ல போன்ற தலைப்புகள், ஆர்வத்தை தூண்டக்கூடியவையாகவும், அப்யாசிகள் அதுபற்றி மேலும் கேட்கத் தூண்டுபவையாகவும் இருந்தன.

சகஜ மார்க்கத்தை பொது மேடைகளில் எவ்விதம் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவது என்பதற்கு பயிற்சியில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதை உண்மையானதாக செய்யும்பொருட்டு, பங்கேற்பாளர்கள் வெவ்வேறு வகையான மக்களுக்கு சகஜ மார்க்கத்தை அறிமுகப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

பயிற்சி ஆரம்பித்த சில வாரங்களுக்குள்ளேயே, பயிற்சியாளர்களின் முன்னேற்றம் கண்கூடாகத் தெரிய ஆரம்பித்தது. அவர்கள் பேச்சுத்திறன் என்ற அம்சத்தில் நன்றாக முன்னேறினர். பெருவாரியான பேச்சாளர்களுக்கு ஆரம்பத்தில் இருந்த நடுக்கம், படிப்படியாகக் குறைந்து வந்தது, பார்க்க அழகாக இருந்தது. அவர்கள் மேடைப்பேச்சுக்கு பழகிக்கொண்டதோடு, அவர்களது பேச்சில் நல்ல முன்னேற்றம் வெளிப்பட ஆரம்பித்தது. பங்கேற்பாளர்கள் தங்கள் திறமையை வளர்த்துக்கொண்டு, பேச்சாளர்களாக முன்னேறிய பிறகு, அவர்கள் அப்யாசிகள் கூட்டத்திலும், பொதுமக்கள் கூட்டத்திலும் பேச சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி வகுப்பின் சில கட்டங்களிலேயே கிட்டிய முன்னேற்றத்தின் அறிகுறிகளும், உத்வேகமும், இதுபோன்ற பயிற்சி வகுப்புகளை பிற மையங்களிலும் நடத்துவதன் மூலம் ஆச்சரியப்படத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுத்ததோடு, இந்தப் பாதையில் இன்னும் அதிக தூரம் முன்னேறிச் செல்ல இயலும் எனகின்ற வியப்புடன் கூடிய நம்பிக்கையும் ஏற்பட்டது.

ஸ்ரீராம் ராகவேந்திரன்

# ஒளியூட்டும் மையங்கள்

## கேரள மண்டல ஆசிரமம், ஆலுவா




ஆலுவாவில் உள்ள மண்டல ஆசிரமம் கேரளாவில் மிஷனின் முதல் ஆசிரமம் ஆகும். இது 2001 பிப்ரவரி 25ம் தேதி மாஸ்டரால் தொடங்கிவைக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில், அவர், கேரள மக்கள் அனைவரும் விழித்தெழுக என்றார். ஒரு அப்யாசியின் வாழ்க்கையில், மூன்று Mகளையும் (மாஸ்டர், மிஷன், பயிற்சிமுறை) கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். கேரளா மற்றும் அருகாமை மாநிலங்களில் இருந்து அதில் கலந்துகொண்ட அனைத்து அப்யாசிகளுக்கும் அது ஒரு வியக்கத்தக்க கொண்டாட்டமாக இருந்தது. ஒருவகையில், கேரள மண்ணில், மிஷனுக்கான ஊக்கியாக அந்நிகழ்ச்சி அமைந்திருந்தது.

இந்த ஆசிரமத்துக்கான வித்து 1995ல் கருக்கொண்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் மாஸ்டரின் அனுமதியைப் பெற்று சில அப்யாசிகளால் வாங்கப்பட்டது. அவர்கள் 55 சென்ட்டுகள் இடத்தையும் சாலைக்கான இடத்தையும் மிஷனுக்கு நன்கொடையாக அளித்தனர். அதன் பின்னர், மிஷன் அதற்கு முன்னே இருந்த நிலத்தையும் வாங்கியது. தற்போது அந்த ஆசிரம வளாகத்தில் 14 அப்யாசிகளின் வீட்டு மனைகள் உள்ளன. அதில் பலர் தங்களுக்கான வீடுகளையும் கட்டிக்கொண்டு அங்கு வசிக்கிறார்கள். இப்போது அப்பகுதி சகஜ கிராமம் என்றழைக்கப்படுகிறது.




5600 சதுர அடியிலான தியானக் கூடம் 1.17 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது. 1400 அப்யாசிகள் இதில் அமர்ந்து தியானம் செய்யலாம். அதில் ஒரு பயணியர் அறையும் உள்ளது. அதில் விழாக்காலங்களில் 90 அப்யாசிகள் இரவு நேரங்களில் தங்கிக் கொள்ளலாம். தியானக்கூடத்தைச் சுற்றியுள்ள இடத்தில் கூடாரங்கள் அமைத்து விழாக்காலங்களில் சுமார் 3000 அப்யாசிகள் தங்கிக்கொள்ளலாம். தியானக்கூடத்துடன் மாஸ்டரின் குடிலும் இணைக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு முழுமையான பொது சமையல்கட்டும் உள்ளது. தியானக்கூடத்தை ஒட்டியிருக்கும் அந்த சமையல்கட்டில் எல்லா வசதிகளும் உள்ளதோடு 1000 சதுர அடியில் ஒரு சாப்பாட்டுக் கூடமும் அத்துடன் இணைந்துள்ளது. அங்கு சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் தனித்தனியாக கழிவறை மற்றும் குளியலறைத் தொகுப்புகள் உள்ளன.



ஆசிரமத்தில் நன்கு பராமரிக்கப்படும் ஓர் அழகிய தோட்டம் உள்ளது. சத்சங்க வேளைகளில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்க போதுமான வசதிகளுடன் ஒரு சிறிய விளையாட்டுத் திடலும் உள்ளது.

ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் மற்றும் மலையாள நூல்களைக்கொண்ட ஒரு நல்ல நூலகமும் அங்கு இயங்கிவருகிறது. அது அப்யாசிகளால் நல்லமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கேரள மண்டலத்தை மையமாகக் கொண்ட பல விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. வரும் ஏப்ரல் 30 தேதி பாபூஜி மஹராஜ் அவர்களின் பிறந்த ஆண்டு நிறைவு விழா ஆலுவா ஆசிரமத்தில் கொண்டாடப்பட இருக்கிறது. இதில் கேரளாவின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் அப்யாசிகள் கலந்துகொள்வார்கள்.

கடுங்கல்லூர் கிராமத்தில், ஆலுவா ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவிலும், 47ம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 3 கி.மீ. தூரத்திலும், கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 11 கி.மீ. தொலைவிலும் இந்த கேரள மண்டல ஆசிரமம் அமைந்துள்ளது.

To subscribe to this Newsletter please visit http://www.srcm.org/centers/as/in/newsletter/index.jsp
For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2008 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved.
"Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.
This message may be edited for content and is intended exclusively for the members of SRCM.